## தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம் - 2017

-----------------------------------------------------------------------------------------------

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 11.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்களது பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 17,667,497 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானமாகியபோதும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, ஏற்பட்ட மதிப்பீட்டு வழுவானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்யப்படவில்லை..

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மூலதன மானியத்தைக் கணக்கிலிடும் கொள்கை மீளாய்வாண்டின்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டு அதற்கமைய மீளாய்வாண்டிற்கு மாத்திரம் ரூபா 3,106,150 காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், முன்னைய ஆண்டுகளுக்குரிய காலக்கழிவு கணிப்பிடப்பட்டு முடிவுற்ற காலத்திற்கேற்ப சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய கற்கை நெறிக் கட்டண வருமானம் ரூபா 6,094,210 ஆகும். எவ்வாறாயினும், குறித்த பதிவேட்டின் பிரகாரம் அந்த வருமானம் ரூபா 5,983,586 ஆகியமையால் ரூபா 110,624 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கற்கை நெறிகளை ஆரம்பித்து அரைவாசிக்கும் மேற்பட்ட கற்கை நெறிக்காலம் முடிவடைந்திருந்தபோதும், குறித்த காலப்பகுதிக்கென அறவிடப்பட வேண்டிய கற்கை நெறிக் கட்டணமாகிய ரூபா 1,294,498 அறவிடப்படாதிருந்தோரது எண்ணிக்கை 121 ஆகும்.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் காணப்படும் பெற வேண்டிய ரூபா 6,094,210 கற்கை நெறிக் கட்டண வருமானத்தில் ரூபா 443,742 ஓராண்டிற்கு மேலாகவும் ரூபா 451,000 இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவும் நிலுவையாக இருந்தன. அம் மீதியினுள் மீளாய்வாண்டில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்த 06 கற்கை நெறிகளுக்குரிய 72 மாணவர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 789,500 கற்கை நெறிக் கட்டணத்தை அறவிடுவதற்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளது உள்ளவாறான செயலாற்றலை சான்றுறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை அவ்வப்போது நிறுவகத்தின் கூட்டிணைந்த திட்டம், பாதீடு, செயலாற்றல் என்பவற்றை மீளாய்வு செய்ய வேண்டுமாயினும், அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேறு ரூபா 7,073,855 மிகை ஆகும். அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,489,462 ஆவதால் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 3.584,393 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது மீளாய்வாண்டில் கட்டணம், தண்டப் பணம் மற்றும் வருவாய் மூலமான வருமானம் ரூபா 4,419,852 அதிகரித்தமை மேற்படி நிதிப் பெறுபேற்று அதிகரிப்பிற்கான பிரதான காரணமாக அமைந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளை இணக்கம் செய்கையில் 2013 , 2014 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நிறுவகத்தின் பற்றாக்குறை 2015,2016,2017 ஆம் ஆண்டுகளில் நிதிசார் மிகையாக மாறியிருந்தன. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், நடைமுறையல்லாத சொத்துக்ளுக்கான தேய்மானம் என்பன மீண்டும் சீராக்கல் செய்யப்படுகையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 14,107,064 ஆகவிருந்த நிறுவகத்தின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 32,712,686 வரை அதிகரித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

4.1.1 **செயற்பாடுகளும் மீளாய்வும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பிரிவென கல்விக்கான குறுகிய கால கற்கை நெறிகளை அறிமுகஞ் செய்தல், சஞ்சிகை ஒன்றைப் பிரசுரித்தல், பிரதேச நிகழ்ச்சித்திட்டத்திற்கான புதிய கூறு ஒன்றை நிறுவுதல், புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை அங்கீகரித்துக் கொள்ளுதல் போன்ற பணிகள் மீளாய்வாண்டின்போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கையில், பணிகளை மிகவும் விரிவாகப் புரிந்து கொள்ளுதல் மற்றும் ஒட்டுமொத்தக் கிரயமும் ஒவ்வொரு பணிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் விதமும் (Cost allocation) என்பன

நிரூபணமாகாமை மற்றும் இலக்கை அடைவதை அளவிடுவதற்கான சுட்டை இனங்காண்பதற்கான நடவடிக்கை என்பவற்றை எடுத்திராமையால் நிறுவகத்தின் இலக்கும் நோக்கமும் அடையப் பெறுவதை நிச்சயிக்க முடியவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

நிறுவகத்தின் நடைமுறைக் கணக்கின் பொருட்டு 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரித்துச் சமர்ப்பித்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் ரூபா 282,500 நேரடிப் பொறுப்பை இனங்கண்டு அதனைக் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.3 நிதியப் பயன்பாடு

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் 2 நடைமுறைக் கணக்குகளில் ரூா 8,293,906 மீதி இருந்ததுடன், ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 8,293,906 முதல் ரூபா 14,277,182 வரையான மீதி இருந்தமை அவதானிக்கப்பட்டது. இத்தொகை நிறுவகத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அல்லது குறுகிய கால முதலீட்டிலிட்டு வருமானத்தைப் பெறுவதற்குக் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 5. நிலைத்து நிற்க வல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்க வல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

(அ) நிலைத்து நிற்க வல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டினது ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், நிறுவகமானது மீளாய்வாண்டில் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் எவை என்பதை அறிந்திருக்கவில்லை.

(ஆ) 2030 ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக நிறுவனம் அறிந்திராமையால் அப் பணிகளுக்கான நிலைத்து நிற்க வல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அவ்விலக்கை அடைவதற்கான வழிவகைகளுக்கான இலக்கை அடைவதை அளவிடுவதற்கான சுட்டையும் இனங்கண்டு கொண்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | கற்கை நெறி வருமானத்தைப் பதிவு செய்தல் | | வருமானப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டும் பூரணப்படுத்தப்பட்டும் பேணப்படாமை. |
| (ஆ) | பயிற்சிக்கான செயலமர்வுகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துதல் | (i) | வரவு இடாப்பில் பங்குபற்றுவர்களது கையொப்பமும் வருகை தரும் நேரமும் குறித்துக் கொள்ளப்படாமை. |
| | | (ii) | நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வெவ்வேறு கோவைகள் பேணப்படாமை. |
| (இ) | பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் | | 2006 பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் உள்ள சில வழிகாட்டலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படாமை. |